

பொய்யாமொழி

ஆசிரியர்—ம. பாஸ்கரனார்.

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, ஆவணி 21 (6—9—50) புதன்கிழமை | மணி 2

வாழ்வுப் பண்.

மண்ணிலிந்த வாழ்வென்றும்
 மண்ணிலத்தில் மடியுமென
எண்ணமிட்டு ஏக்கத்தில்
 எழில்குலைந்து வாழ்வோரே?
பண்பரப்பும் வண்டெனவே
 பாரிலின்பம் சூழ்ந்திடவே
வண்ணமுடம் வாழ்ந்திடலாம்
 வகையெதுவா? கேட்டிடுவீர்.

கனவல்ல இவ்வாழ்வு
 கத்துங்குயிற் காவனமே
வனப்புமிகும் கவியன்னை
 வன்னத்தமிழ்ப் பாவடித்து
அனல்கக்கும் துயரத்தை
 அணைத்திடவே அமுதமென
உனக்குத்தினம் தந்திடுவாள்
 உயர்இன்பம் வேறென்றுண்டோ?

துன்பமில்லை இவ்வாழ்வு
 துள்ளுமீனின் இன்வாழ்வு;
கன்னியன்னை இயற்கையவள்
 கடைக்கண்ணின் பார்வைகூட்டிப்
புன்னகையின் புத்தெழிலைப்
 புனலெனவே யுன்னுளத்தில்
வன்னக்கையால் ஊற்றிடுவாள்
 வாழ்வின்பம் வேறெதுவோ?

விதியென்று ஏழைகளின்
 வாழ்வுதனை வீழ்ந்திட்வே
சதிசெய்யும் செல்வர்களைச்
 சடுதியிலே வீழ்த்திவிட்டு
மதியுடனே மக்களெலாம்
 மகிழ்வுடனே வாழ்ந்திடவே
புதிதாகஓர் உலகைப்
 புனைந்திட்டால் துயரேது!

வார இதழ். ★ விலை அணா 1.

வாழ்த்துச் செய்திகள்

கலைஞன் ஆசிகூறுகிறார்

அன்புடையீர்!

மெய்யான வாக்கோடு
ஐயா! நின் பொய்யாமொழி
கொய்யாத வாருலகில்
என்றென்றும் தளிர்த்திடவே.

சிதம்பரம் ஜெயராம்.

ஃ ஃ ஃ

A. மெத்துசலா,
செயங்கொண்டம். 22—8—50.

பல நாட்களாக என் மனதில் பதிந்துள்ள கருத்துக்களை வெளியிடுவதற்கு வசதியான பத்திரிகையில்லையே என்ற கவலையைத் தீர்த்து வைக்குமுகத்தான் எனது தோழர், M. பாஸ்கரனார் 'பொய்யாமொழி' என்னும் இவ்வார இதழை ஆரம்பித்திருப்பதற்கு எனது மனமார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் முயற்சி வெற்றியளிக்க வேண்டுமென்று வாழ்த்தும் கூறுகிறேன்.

ஃ ஃ ஃ

தி. மு. கழகம்,
செயங்கொண்டம். 19—8—50.

அன்புடையீர்!

வணக்கம். பொய்யாமொழி என்ற வார இதழ் 31—8—50லிருந்து வெளிவரும் என்ற செய்திகேட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைந்தோம்.

பொய்யாமொழி இதழின் ஆசிரியர் தாங்கள் என்று தெரிந்ததும் அளவில்லா ஆனந்தம் அடைந்தோம். தங்களைப்பற்றி நாங்கள் அதிகம் கூறத் தேவையில்லை. இன்றுள்ள நிலையில் முன்னேற்றங் கண்டு அதில் பங்கு கொண்டு தளராது உழைத்து வருகிறீர்கள். வளர்க உமது தொண்டு.

பொய்யாமொழி இக்காலத்தில் அவசியம்தானு என்று பார்த்தால் பொய்யும், பித்தலாட்டமும் நிறைந்த இந்த நாட்டில் பொய்யாமொழி இதழ் அவசியம் வேண்டும் என்றுதான் சொல்லவேண்டும்.

பொய்யாமொழி தொழிலாளர்களின் தொல்லைகளையும், பாட்டாளி படும் துயரங்களையும் களைந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

பொய்யாமொழிக்கு ஆதரவாகவும், அரிய கருத்துக்களையும் எழுதியும், ஆசிகூறியும், வேண்டிய சகல உதவியும் செய்வோமெனத் தெரிவித்துக் கொள்கிறோம், வாழ்க நும் புகழ்...! வளர்க உமது தொண்டு..! வெல்க உமது முயற்சி...!

ஃ ஃ ஃ

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆம்...! நியில் அகப்பட்ட புழு — தூண்டியில் அகப்பட்டமீன் — பொறியில் அகப்பட்ட எலிபோல், ஆறுமுகத்தை கண்ட கண்ணனும் — சிங்காரியும் துடித்தனர்!

முடிவு கண்ணன்—சிங்காரி—ஆறுமுகம் மூவரின் இருதயத்தையும் ஆழம்பார்த்தது; ஆறுமுகம் கரம் பிடித்திருந்த கத்தி!

பூகம்பத்தில் சிதறும் மணலைபோல்; இம் மூவரும் அடித்து கீழே வீழ்ந்து துடிக்கும்போது எழும்பிற்று தூசிகள் — எரிமலை கக்கும் அக்னி குழம்பைபோல்; இம் மூவரின் இதயத்திலிருந்து இரத்தம் பீரிட்டது-சூராவளி அடிக்கும் வேகம்போல்; இம் மூவரின் கடைசி மூச்சும் வெளியேறிற்று!

அந்தோ! காதல் பீடம், கணநேரத்தில் பலிபீடமாயிற்று!

சந்தேகமில்லை! சாதிப்பெருமை சாயக்கூடாது, குலப்பெருமை மாயக்கூடாது என்று எண்ணி செய்த இந்த விதண்டா விவாகத்தால்தானே ஏற்பட்டது இப் பலிபீடம்! ஊழலை போக்க இடமளிக்காத இந்து மதம் எடுத்து இயம்பும் குருட்டு நம்பிக்கையாலும், மூட பழக்க வழக்கத்தாலும் செய்த இந்த பொருந்தா கல்யாணத்தால்தானே உண்டானது இப்பலிபீடம்!! ஆண்டவன் செயல், பூர்வகர்ம பலன், தலைவிதி என்ற தத்துவார்த்தங்களுக்கு தலையசைத்து ஆண்டவன் இவ்வாறு அலங்கோலப்படுத்தஎண்ணியவனல்லன் என்றதை உணராத இத்தைய பொருந்தா மணம் புரிந்ததால் தானே பிறந்தது இப்பலிபீடம்!!! —(முற்றும்.)

காரம், மணம், குணம், நிரம்பியது
இந்தியா மார்க் புகையிலை
—: தயாரிப்பவர் :—
தி இந்தியா புகையிலை கம்பெனி,
கு. சன்னதித்தெரு, : கும்பகோணம்.

உணவு அபிவிருத்தியடைய

★

உ. தா. விவசாயிகளுக்கு விறைப்பதற்கு விவசாய டிமான்ஸ்ரேட்டர் ஆபீசில் விறைநெல்கொடுக்க சாத்திய மில்லை என்று தெரியவருவதால், பக்கத்திலுள்ள தென்னாற்காடு, தஞ்சை ஜில்லாக்களிலிருந்தும், திருச்சி ஜில்லாவில் உடையார்பாளையம் தாலூகாவுக்கு மற்றய தாலூகாக்களிலிருந்தும் விறைநெல் கொண்டுபோவதை தற்காலீகமாக அந்தந்த ஜில்லா கலெக்டர்கள் அனுமதித்து உணவு அபிவிருத்தியடைவதில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த உத்திரவை சர்க்கார் உடனே செய்ய வேண்டியது அவசியமாகிறது இல்லையேல் இவ்வருஷமும் உணவு பஞ்சத்திலிருந்து இத்தாலூகா ஓரளவாவது தப்புமுடியாது. சர்க்கார் உடனே தலையிட்டு ஆவன செய்ய முன்வருமா ?

ஏற்கனவே குண்டிராங்குழி ஏரி ஆயக்கட்டில் நல்ல பாய்ச்சலிலிருந்து நஞ்சை சாகுபடி செய்யப்பட்டுவந்தது. ஏரியை சரிவர மராமத்து செய்யாமல் விடப் பட்டு விட்டதினால் ஷை ஏரி பாய்ச்சல் தடைப்பட்டிருப் பதை மராமத்து செய்து கொடுக்க முயற்சித்தால் உணவு பஞ்சத்தை தடுக்க உதவும், சர்க்கார் உடனே தலையிட்டு செய்ய முன்வருமா ?

தவவாய், தத்தனூர், வங்காரம், முல்லையூர்களுக்கு பெரம்பலூர் தாலூகா சின்னாறு மூலம் ஓலைப்பாடியில் முகப்பு வைத்து பாசனத்திற்கு வசதி செய்தால் ஷை ஊர் களிலுள்ள ஆயக்கட்டு ஏரிகள் தண்ணீர் தட்டில்லாமல் நிரந்தர விளைவுண்டாகும், அதனால் சுமார் 500 ஏக்கர் வரை நல்ல பாசன வசதியும் ஏற்பட்டு இன்னும் 200 — 300 ஏக்கர்கூட பாய வசதி ஏற்படும். உணவு அபிவிருத் திக்கும் பயன்படும். சர்க்கார் உடனே செய்யுமா?

குழுமூர் ஓடையிலிருந்து குழுமூர் ஏரிக்கு தண்ணீர் திருப்பிவிட திட்டம் தயாரித்திருப்பதை உடனே செய்தால் சுமார் 400 ஏக்கர்வரை பாய வசதி ஏற்படும். சர்க்கார் உடனே ஏற்பாடு துரிதமாய் செய்யுமா?

உ. தா. பொன்னேரியில், ஷை ஏரியின் நீர் தேக்க மானது (Shutter's) ஷட்டர்ஸ் சரியில்லாமல் தினம் 1-க்கு நீர் மட்டம் 2 அடி தண்ணீர் வீணாக வெளியே போய் தேவையானபோது தண்ணீர் பாய்ச்சுவதற்கின்றி விளைவுக்கு குந்தகம் ஏற்பட்டு சுமார் 6, 7 வருஷமாய் ஏரிகட்டி முடித்த காலத்திலிருந்தே சுமார் 1500 வரை பாயவேண்டியது 700 — 750 வரை பாய்ந்துகொண்டி ருக்கிறது. ஷை கெடுதியிலிருந்து வருவதை ஷை ஏரியை சேர்ந்த நிலச்சுவான்தார்கள் சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு பலமகஜர் மனுக்கள் கொடுத்தும் கொடிய உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ள இந்த நாளிலாவது உடனடியாக ஷட்டர்சை திருத்தியமைத்து தண்ணீரை உடனே தேக்கி கொடுக்கும்படி சர்க்கார் நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

குறைதீருமா?

★

சுகாதார ஆபீஸ் கட்டிடத்திற்குமுன் ஏக நாற்றம்...!

ஜெயங்கொண்டம் கடைத்தெருவில் சப்-ரிஜிஸ்தரர் ஆபீஸ், சுகாதார ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன் இந்த மூன்று கட்டிடங்களும் ஒரே காம்பவுண்டுக்குள் இருக் கின்றன. ஷை ஆபீஸ்களின் கக்கூஸ் சுகாதார ஆபீஸ் கட்டிடத்திற்கு முன்புரமாயும், மெயின் ரோட்டை ஒட்டியும் ஷை ஆபீசுக்கு நுழையும்வாயிலிலும் அமைக்கப் பட்டிருக்கிறது. பொதுமக்கள் ஷை ரோட்டு வழியாக நடக்கமுடியாத அளவிற்கும் ரோட்டு ஓரங்களில் இருக்கும் உணவு, சிற்றுண்டிசாலைகளில் உண்போரை உண்ணவொட்டாத அளவிற்கும் ஷை கக்கூசின் கழிவுநீர் ரோட்டிற்கு வந்து ஏக துர்வாடை அடிக்கிறது. இதனால் பொதுமக்கள் பெரும்பாலும் வியாதிக்குள்ளாக வேண்டி வரும். இது விஷயமாய் ஷை காம்பவுண்டுக்குள்ளிருக்கும் ஆபீஸ் அதிகாரிகள் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கி றார்களோ என்னவோ இதைப்பற்றி இனிமேலாவது உடனடியாக சுகாதார மேல் அதிகாரிகள் சிரத்தை எடுத்து ஷை கக்கூசை வேரிடத்திற்கு மாற்றுவார்களா ?

★ ★ ★

உண்மையா?

உடையார்பாளையம் தாலுகாவில் சில சில்லரை நூல் வியாபாரிகள் சரிவர நூல் விநியோகம் செய்யவில்லை என புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே சம்பந்தப்பட்ட வியாபாரிகள் புகார்கள் மேலும் அதிகமாவதற்கு முன்பாக தங்களைத் திருத்திக் — கொள்வார்களென எதிர்பார்க்கிறோம். —

(ஆ—ர)

★ ★ ★

இப்படி பாழாகும் தண்ணீரை வேறு ஏறிகளில் தண்ணீரை கட்டிக்கொள்ள அனுமதிக்காதபோது தண்ணீரைப்பாழாக்க எப்படி மனந்துணிகிறதெனத் தெரியவில்லை...!

ஃ ஃ ஃ

கிடாரங்குண்டான் ஓளவடை ஏரிக்கு கச்சேரிப்புளி பக்கம் ஓடிவரும் ஓடை மழைத்தண்ணீரை மதகு கட்டி தேக்கி ஷை ஏரிக்கு விட்டால் சுமார் 100 ஏக்கர்வரை நிலங்களுக்குபாய்ந்து அந்த ஏரியில் சருக்கல்கட்டி பாக்கி தண்ணீரை அண்ணங்குந்தான் ஏரிக்குதண்ணீர்விட்டால் ஷை ஏரியின் மூலம் சுமார் 50 — 60 ஏக்கர்வரை தண்ணீர் பாய்ச்ச ஏதுவாகும். அப்படி ஷை ஏரிகளுக்கு மராமத்து செய்யும் சிலவுக்கு ஒருபாதி ஷை நிலச்சுவான்தார்கள் கட்டுவதற்கு ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

பொய்யாமொழி

வார இதழ்

சந்தா விபரம்

ஆண்டு	ரூ.	3	0	0
ஆறு மாதம்		1	12	0
தனிப்பிரதி		0	1	0

பொய்யாமொழி

ஆசிரியர்: ம. பாஸ்கரனுர்

கதிர் 1 | 1981, ஆவணி 21 புதன். | மணி 2

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅ ரெனின்.

(வாலறிவன்) (தூய மனம்) வெள்ளையான உள்ளம் கொண்ட (கபடு, சூது, தனிநலம்) காணுத அறிவுக் கறிவாய் அறிவை ஆராய்ச்சி கொண்டு அறிந்து தெளிந்த ஒருவனைப்பின் பற்றி அவனைச்சார்தல். (வணங்காவிடில்) நீ படித்து பல நூல்களை உணர்ந்தநிஞல் என்ன நன்மைதரும் என்பதே மிகச்சிறந்த கருத்தாகும்.

1951-க்குள்
சுயதேவை வெற்றியுற!

உடையார்பாளையம் தாலுக்காவை பொறுத்தவரை பூருவும் சில ஆயக்கட்டு ஏரிப்பாசனமும் தா. பழூர் பிர்க்காவில் ஒரு பகுதிமட்டும் பொன்னுத்து வாய்க்கால் பாசனத்தால் நஞ்சையாக்கப்பட்டுளது. ஆனுலும் தாலுக்காவை தன் உணவுதேவை பூர்த்தி திட்டத்துக்கு குறிப்பாக ஆங்காங்குள்ள ஆயக்கட்டு நீர்பாசன ஏரிகளை மராமத்து செய்வதோடு அதற்குத் தண்ணீர் தேங்கும்படியான வசதிகள் செய்து தந்தால் கேணிமானியம் வீணுகிவிடாது சுமாராய் ஊறக்கூடிய கேணியாயிருந்தாலும் 1 ஏக்கர்வரைதான் பாயும். அதற்கு கிராண்ட் சர்க்காரில் கொடுப்பது இந்த தாலுக்காவுக்கு ரூ. 500 ஆகிறது. ஆனுல் சராசரி ஆயக்கட்டு ஏரிகள் போன்றதும் புதுக்குடி ஏரிபோன்ற பெரிய சுமார் 12 மைல் நீளமும் 3 மைல் அகலம் உள்ள ஷை ஏரியானது சுமார் 15 மைல் நீளமும் 8, 10 மைல் அகலமுள்ள விஸ்தீர்ணங்களுக்குட் பட்ட நிலங்களுக்கு பாய்ச்சல் வசதியும் குடி தண்ணீர்குறையும் நீங்கும். மேலும் பெலாந்துரை அணைக்கட்டுமூலம் பிரிக்கப்படும்வாய்க்காலானது வழியிலும் சில இடங்களுக்கு பாய்ச்சலுக்கும் வசதியாகும். இதேபோல் மற்றைய தாலுக்காகளும் பற்றுக்குறை ஜில்லாக்களுக்கும், நிலச்சுவான் தார்களிடம்ஒருபாதியும், கவர்ன்மெண்ட் கிராண்ட்டில் ஒரு பாதியும் போட்டு செய்தால் அந்தந்த ஜில்லாக்களில் பற்றுக்குறை நீங்கும் போது, உணவு நிலை திருப்தியடையவும் ஏதுவாகும். கொடிய பல இடங்களில் உயிரை மாய்த்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில் முக்கியமான காரியங்களை செய்வதே சிறந்த சேவையுமாகும். ஆளவந்தவர்களால் ஏற்பட்ட சாதனங்களானது பலரால் பல காலம் புகழ வாய்ப்பு ஏற்படும். தஞ்சை, பட்டுக்கோட்டை தாலுக்கா பகுதி வாய்க்காலை திறந்துவிட்ட, சர் சி.பி.ராமசாமிஅய்யரை போற்றுதாருண்டா?

நமது கனம். பக்தவத்சலம் அவர்கள் மராமத்துமந்திரியாயிருக்கும்காலத்தில் திருகனம் குமாரசாமி ருஜா அவர்கள் பிரதம மந்திரியாய் இருக்கும்காலத்தல் இத்திட்டம் பூர்த்தியடைந்தால் அவர்களின் பெருமுயற்சியும், அரிய தொண்டும்தான் இதற்குக் காரணமென்று நினைக்கும் இன்றைய பெரியோர்களும் வருங்கால வாலிபர்களும் போற்றி புகழாதவர்களும் இருக்க முடியாது. பொன்னெழுத்துக்களால் பொறிக்கவும் கூடும். ஆகையால் இந்த முயற்சி செய்து சோழ அரசர்கள் காலத்தில் ஏற்பட்டு செம்மையாய் பாய்ந்துவந்த ஏரிகளை பழுது பார்த்து — சோழவளநாடு சோறுடைத்து என்பதை மெய்ப்பித்து—பேரும் புகழுமடையுமாறு இறைஞ்சுகின்ருேம்.

நாட்டியக் (கொ)கலை.

இன்று காணப்படும் ஒரு சில சினிமாக் காட்சிகளைத்தவிர மற்றைய 100-க்கு 99 சினிமாக்களில் நாட்டியக்கலை அதாவது கவலையை

தீர்ப்பது நாட்டியக்கலையே என்று பாடின காமுகனை மைனர் ஷோக்காளி குடும்பபாரம் அறியாத உல்லாசவாசி பாடிய பாட்டைவைத்து கொண்டே சினிமா என்றால் நாட்டியம் ஒன்று அதில் கட்டாயம் இருந்தே தீருமென கட்டாய படுத்தி விட்டார்கள் சினிமாக்காரர்கள்.

பழங்காலத்தில் தவத்தை மேற்கொண்ட விசுவாமித்திரன் போன்றவர்களின் தவத்தை கலைக்கவும், சிவபெருமான் கண் விழிக்காமல் உலகம் இருண்டு வெளிச்சமில்லாது போய் அந்தகாரம் நிறைந்து விட்டதாய் நினைத்து, ஏனெனில் சிவபெருமானின் வலது கண் சூரியனென்றும், இடது கண் சந்திரனென்றும் கதையை நம்பிய காலமுண்டோ என்னவோ அந்த காலத்தில் உலகம் உய்ய தவசிரேஷ்டர்களின் தவத்தை ஏதேனும் காரணம் கொண்டு கலைக்க எண்ணி ரம்பைகளும், ஊர்வசிகளும், திலோர்த்தமைகளும் ஏற்பட்டிருந்தால் அதிலாவது பொருளுண்டு. புத்திரபேரில்லாமல் மனித சமுதாயம் குறைந்து மனிதப் பூண்டே ஒழிந்துவிடுமே என்றஎண்ணத்துடன் காமவிகாரத்தை உண்டுபண்ணக் கூடிய அபிநயங்களுடன் காமவிகாரத்தால் தூண்டப் படாத மனிதர்களுக்கு எண்ணங்கள் உண்டாகவேண்டி ஷை நடனங்கள் தேவைப்பட்டிருக்கலாம் ஆனால் 10, 12 வயதிலேயேபூராவிபரமும் தெரிந்து கொண்டிருக்கும் இந்த காலத்திலே விபசாரத்தால் சீர்கேடுற்று பல படு கொலைகளும், பல விபசாரங்களும் பெருகி சொல்ல வொணாத கொடுமைகள் நிகழ்ந்துள்ள இந்த நாளில், சினிமாக்களில் நடக்கும் நாட்டியமானது நல்ல யோக்யமான ஒரு குடும்ப பெண்கள் பார்க்க கூசி வெட்கப்படுமளவுக்கு அதிலும் கல்யாணமாகாத கன்னிகைகளும், சமுதாய சமுக்கர்களால் இளம் விதவைகளாக்கப்பட்டவர்களும் பார்க்க கூடியதும், அதேநேரத்தில் வாலிபர்கள் ஷை நாட்டியத்தைக்கண்டு அக்கம்பக்கமுள்ள பெண்களை பார்த்துக்கொண்டு கை தட்டி விசிலடித்து சிரிக்கும்படி நாட்டியமாடும் பெண்ணின் ஸ்தனங்களை தனியே அசைத்துக்காட்டி (திரேகாப்பியாசத்தில் சதைகளைப் புரட்டி காட்டுகிறமாதிரி எடுத்து காட்டி) முனைகளுக்கு குறிப்பிட்ட கருப்பிட்டுகாட்டி ஸ்தனங்களை ஆட்டச்செய்ய சினிமா டைரக்டர்கள் கடுகளவுகூட செம்மையான சிந்தனையற்று இக்காரியத்தை செய்து மகிழ்கிறார்களே அவர்களுடைய தாய், தங்கை, மனைவிமார்களை சினிமாவுக்கு அழைத்துகொண்டுபோய் இதையெல்லாம்காட்டினால் பெண்குலத்தை இழிவுக்குட் படுத்தும் டைரக்டருக்கு (பெண்ணினங்களைப்பற்றி கவலையுடையவர்களானால்) அந்த பெண்கள் நல்ல புத்தி கற்பித்திருப்பார்கள்.

ஒரு சிலர் சொல்லலாம் அவர்கள் ஒத்துக்கொண்டு ஆடும்போது நாமென்ன செய்யலாமென்று. அதிகமாக அள்ளிக்கொடுக்கும் பணத்தைக்கொண்டு விலைமாதர்களாய் வயிறு பிழைக்க எண்ணி பணத்தாலே பெருமையடைந்து விடலாம் இந்த உலகில் என்று எண்ணிய அந்த பெண்கள் டைரக்டரின் கொடுமையானதும், தனக்கும் சம்மதமில்லாத போதிலும், பணத்துக்கும் அக்ரிமெண்ட்டுக்கும் பயந்து கேவலமான, மிருகங்களோடு ஒப்ப உள்ள நிலையில் டைரக்டர்களின் கோரச் செயலுக்குட்பட்டு நடிக்கிறார்கள். என்றாலும் இதற்கு சென்சார்போர்டு என்று ஒன்று உண்டு. அந்த போர்டானது—மற்றய நாட்டு சீர்திருத்த முற்போக்குகள் உள்ள உரையாடலையும், நடைப்பகுதிகளையும் கட்டாயமாய் கத்தரிக்கும் சென்சார்போர்டானது எப்படி இதை அனுமதித்துக் கொண்டிருக்கிறதோ நாமறியோம்.

அநியாயமான அறுவறுக்கும்படியான நாட்டியம் நாட்டியக்கலை இது. எந்த சென்சார்போர்டு இனி அக் குறைபாடுகளை தீர்க்குமோ? ஒரு சில பெண்ணினத்தை ஆதரிக்கும் எந்த பெண்ணாவது சென்சார்போர்டில் அங்கம் வகித்தால் ஒருவேளை ஆபாசங்கலந்த நாட்டியங்களை விலக்கிவிட எண்ணுவார்களோ என்னமோ.

பெண்ணினத்தில் அக்கரை கொண்ட பெற்றோர்களும், வாலிபச் சகோதரிகளும், பெண்குலத்தை தாய்க்குலமென்று மதிக்கும் ஏனைய சர்வகட்சி தொண்டர்களும் பொதுநோக்கில் அக்கரைகொண்ட மக்களும், அந்த மாதிரி சினிமாக்களைப் போய்ப் பார்ப்பதில்லை, பார்க்கக் கூடாது என்று மறியல் செய்யவேண்டிய அவசியம் வருமளவும் மேலும். மேலும் ஆபாசங்கள்நிறைந்த நாட்டியங்களை பகிஷ்கரிப்பது. அவசியமானால் மறியலும் செய்வது என்ற முடிவுக்கு வந்தாலல்லது விபசாரத்தின் அபிவிருத்தியையும். அசம்பாவிதமானதுமானதும் நாட்டுக்குஅவசியமற்றதுமான நிகழ்ச்சிகள் தடைபடாது என்ன செய்யப்போகிறீர்கள்...?

★★★★★★★★★★★★★★★★★

எம் நன்றி.

★

கல்யாணகாலத்திலும் தன்வருமானத்தையும், தங்களின் கஷ்டத்தையும் பாராது சென்ற இதழை இரவு பகலாக வேலைசெய்து அச்சிட்டு கொடுத்த ஸ்ரீ ரத்னா அச்சக உரிமையாளர் அவர்கட்கும், மேற்பார்வையாளருக்கும், தறிப்பாக அச்சுத் தொழிலாளர்கள் அனைவருக்கும், எம்வேண்டுகோட்கிணங்க பொய்யாமொழி துவக்க நாளுக்கு தலைமைதாங்கிய திரு. டாக்டர் A. சாமுவேல் அவர்களுக்கும், துவக்கம் செய்துவைத்த திரு. முத்துக் குமாரசாமி முதலியார் அவர்களுக்கும், அதை ஆதரித் துப்பேசிய க. குஞ்சிதபாதம் பெரியதனக்காரர் அவர்களுக்கும். ஜனாப் அ. இ. காதர்கான் அவர்களுக்கும், உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. ஆரோக்கியசாமி B. A., B, T., அவர்களுக்கும் புலவர் திரு. அரங்கசாமி அவர்களுக்கும், திரு. பழமலை அவர்களுக்கும், முறையே எம் நன்றி உரித்தாகும். துவக்கநாளில் வந்து கலந்து கொண்டு பொய்யாமொழிக்கு ஆசிகூறிய அன்பர்கள் அனைவருக்கும் எம் நன்றி.

[ஆசிரியர்]

★★★★★★★★★★★★★★★★★

(கிராம நிகழ்ச்சி)

கேணி மான்யம்.

[உரையாடல்]

கணபதி:- என்னப்பா கந்தசாமி அவர்களே நீங்கள் 1946ல் கேணிமனியம் வாங்கினீர்களே கேணிவெட்டி கட்டி முடிந்து பாய்ச்சல் நடக்கிறதா?

இப்பொழுது நீங்கள் உங்கள் குடும்பத்துக்கு சில மாதத்துக்காவது உணவு தேவையை பூர்த்திசெய்து கொண்டிருப்பீங்க. நீங்கள் சவுகரியமாயிருப்பதே எனக்கு ரொம்ப சந்தோஷம்.

கந்தசாமி:- ஏங் கேக்கிறீங்க! அந்த கன்றுவியை கேணிவெட்ட ரூ. 300—0—0 சர்க்காரிலே கொடுக்கிறுங்களேண்ணு ஆசையாத்தான் 10—30 அதுக்கு இதுக்குண்ணு. செலவுண்ணு கூடபாக்காமே 5—6 தரம் நடையா நடந்து வாங்கினேங்களா.

ஊம்—அப்புரம்,

கேணிக்கு பணம் வாங்கிகிட்டுபோய் கேணியை ஆளுவ நாங்கள் எல்லாரும் சேர்ந்து வெட்டினேம், சொட்டு தண்ணிகூட இல்லீங்க.

ஊம்—அப்புரம்!

இன்னும் கொஞ்சம் வெட்டிபாருண்ணு எல்லோரும் சொன்னுங்க சரிதாண்ணு மறுபடியும் வெட்டினேம் மழைபேஞ்ச அண்ணைக்கு புள்ளைக்குழிலே, கொஞ்சம் தண்ணிகண்டதுங்க.

கண:- ஊம்—அப்புரம்.

கந்:- எங்கியோ சண்டை நடக்குதுண்ணுங்க! நான் நெனெச்சது சண்டை எல்லாம் போயிட்டுதுண்ணு. சாமான் எல்லாம் மலிஞ்சுபோயிடும் நாம்பளும் பசங்களும், பண்ணைக்காரனும் குந்திதானே கிடக்கிறேம். வேலையெ நாம்பளே செஞ்சா ஆளு கூலியாவது மீருதா எண்ணுநினைச்சிகிட்டுல்லே வாங்கினேன்.

கண:- ஊம்—அப்புரம்.

கந்:- சண்டை சமயத்திலேகூட எந்த சாமானும் இவ்வளவு விலைவாசி ஏறுலீங்க. போனலும் போச்சிங்க சண்டை, அதிலேயும், எங்கோயோ நடந்த சண்டை, தெருவுக்குத் தெருவு நடந்து பயிரு பச்சை கிராமம் எல்லாம் எரிச்சி சாம்பலாக்கிட்டு போயிட்டாங்கண்ணு சொன்னீங்களே அங்கெல்லாம் பஞ்சம் பறந்து போச்சின்னு நீங்ககூட அடிக்கடி சொல்லிகிட்டேயிருக்கிங்களே பேபரைப்படிச்சி! இங்கே சண்டையே நடக்காமே இருந்த இடத்திலே, ஏங்க எல்லா சாமானும் இவ்வளவு வெலை ஏறிக்கிட்டுதுங்க! அதிலேயும் சண்டையும் முடிஞ்சபுற இப்போதான் 47ல் சுதந்திரம்வந்துட்டுதுண்ணு ஊரெல்லாம் கொடியெபிடிச்சுகிட்டு, கொண்டாட்டம்போட என்னைகூட கொடி புடிச்சிகிட்டு மாலெவலையெல்லாம் கட்டி சந்தோஷப்படச் சொன்னீங்களே. நான்கூட நம்ப வறுமை எல்லாம், இனிமே நம்ப பக்கம்கூட தலைக்காட்டாது. நம்பளெ சொறண்டிகிட்டிருந்த வெள்ளைக்காரன் தான் தொலைஞ்சி போயிட்டானே. பாழாபோனவன்.

கண:- ஏம்பா, போனவனை திட்டாதே. அவன் தான் போயிட்டானே.

கந்:- நீங்ககூட முன்னெல்லாம், காங்கிரஸ் கூட்டம் போட்டு, சேங்கணத்திலேயிருந்து பாசுகரன். காதரு, எழுத்துகாரு குப்புசாமி பிள்ளை இன்னும் ஆருரியோ எல்லாம் வந்துகூட, அந்த வெள்ளைக்காரன், இருக்கிறதிலே அவன் அன்னியன் நம்பளை ஒரு பேனுகத்திகூட வச்சிக்கோ, விடமாட்டெங்குருன் அப்படியே நம்ம நவரத்தின மயிலு கியிலு எல்லாம் கொண்டு போயிட்டான் அப்புரம் துணியிலே, லங்காஷ்யர் என்கிற மில்லுதுணி மூலமா பணத்தெல்லாம் கொள்ளை அடிச்சுகிட்டு போருண்ணு சொன்னீங்களே அதெல்லாம் கேட்டு அப்படியே, நாங்கள்ளாம் பூரிச்சி போனேம்;

என்வ கந்தா...... நான் என்னமோ, சொல்றேண்ணு நினைச்சேன் என்னியேல்ல, நீ, இப்போ கொடையிறே—.

கந்:- இல்லீங்க, நெனெச்சி பாருங்க நீங்கசொன்னதெல்லாம் நெனைச்சி, இப்போ நீங்க செய்யறதையும் நெனைச்சா...கிடக்குபோங்க.

கண:- என்ன கந்தா...! ஒருநாளும் நீ இவ்வளவு கோபமா பேசமாட்டே. ஏது இவ்வளவு கோபம்...! பொறுமையா சொல்லு. நான் சமாதானமா பதில் சொல்றேன்.

கந்:- என்னுத்தெ சொல்லப்போரீங்க... நா ஒன்னுண்ணு சொல்றேன், சொல்லுங்க பார்க்கலாம்... நாங்கள்ளாம் குடியானவங்க, கிராமத்திலேயே இருக்கிறவங்க. எங்ககையிலே காசு, பணம் தானியம் விளைஞ்சதும், கல்யாணம், கருமாதி, எழவு, எட்டாந்துக்கம்னு வரப்போ தானியத்தை வித்துபுட்டு, அதெ, இதை செஞ்சுபுட்டு, பாக்கி நாளெல்லாம் கடன் கிடன் வாங்கிகிட்டு கையிலேண்ணுகாக தங்காது. அதுக்குண்ணு எங்கமுன்னவங்க காலத்திலேயிருந்து ஓங்களாட்டெமில்லாம் காயே கறியெ திண்ணு பழக்காமெ, கரியெ, மீனெ, கோழியைகொக்கெ, குயிலெ, புருவெ, காட்டுப்பண்ணியே திண்ணுபழக்கிப்பிட்டாங்க .. என்று கந்தன் முடிப்பதற்குள் கணபதி குறிக்கிட்டு, 'கந்தா! நான் இன்னிக்கி ஒரு இடத்திற்கு அவசரமா போகணும். நாளைக்கு பேசிக்கிலாமே... உம். என்ன... சரிதானே...! கந்தா!

கந்:- 'என்னமோ செய்யுங்கோ! ஏழைப்பேச்செல்லாம் கேட்க உங்களுக்கு நேரமில்லெ... ! சரி, நாளைக்கு பேசிக்குவோம். (போகிருன்)

1950 ஆண்டு ஆகஸ்ட்டு 30 தேதி ஜெயங்கொண்டம் தேவாங்கர் சத்திரத்தில் மாலை 6 மணிக்கு

மீ. முகமதுஷரீப்

— அவர்கள் தலைமையில் —

பாவுபட்டரை பங்குதாரர்களின் சங்கம் நிறுவப்பட்டது.

சங்கத்துக்கு நிர்வாகஸ்தர்களாக அடியில் கண்ட 15 பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்:-

நிர்வாக கமிட்டி தலைவராக, கி.மு. நடராசன் அவர்களும் பொருளாளர் & உபதலைவராக, K. B. அப்துல்காதர் ருவுத்தரும், செயலாளர்களாக, P M முகமது ஷரீப், அவர்களும், A. மொட்டையன் அவர்களும், நிர்வாகமெம்பர்களாக:- K. R. முகமது காசிம், K. B. முகமதுகாசிம், S. தங்கவேலு, S. ராமலிங்கம், S. சிங்காரம், K. சாமிகண்ணு, T. சாமிகண்ணு, K. சந்திரகாசி, S. சின்னதம்பி N. P. சுல்தான் சாயபு, T. M. முகம்மதுயாகூப்.

... ... தங்கையின் எதிர்கால வாழ்வு இருண்டு போவதைப் பற்றி ஏக்கம்அடைவதற்கு பதிலாக; தன் வசதி நிறைந்த வருங்காலத்தை எப்படி எப்படி... ... ...

?

பலிபீடம்

A. V. ரமணி.

[சென்ற வாரத் தொடர்ச்சி]

ஏக்கம் அவளுக்கு எங்கிருந்து எழும்பும்.........! சிங்காரிதான் தன் முகூர்த்த ஓலை எழுதும் அன்றே தனக்கு வரப்போகும் மணவாளனை நினைத்து மயங்கி போனாளே — அவள்தான் தன் பரிசத்தன்றே தனக்கு கிடைக்கப்போகும் புருஷனை எண்ணி புலம்பி விட்டாளே — தனக்கு கல்யாணம் நடந்த அன்றே தன் கணவனைப் பற்றி கண்ணீர் சிந்திவிட்டாளே — இப்பொழுது கந்தப்ப செட்டியார் காலமானதற்கு வேரா......!

ஆறுமுகம் தன் தங்கை தாலி இழந்ததற்காக வருந்துவதற்கு பதிலாக; தனக்கு தாய் மாமனின் பெரிய அந்தஸ்து திரும்பபோவதைப் பற்றி எண்ணி பூரித்தான் தன் தங்கை கணவன் கந்தப்ப செட்டியார் காலமானதை பற்றி கவலை படுவதற்கு பதிலாக, அவருடைய சொத்து பூராவும் தன் வசம் வரப்போவதை நினைத்து நிம்மதியடைந்தான் — தங்கையின் எதிர்கால வாழ்வு இருண்டு போவதைப்பற்றி ஏக்கம் அடைவதற்கு பதிலாக; தன் வசதி நிறைந்த வருங்காலத்தை எப்படி .. எப்படி கழிப்பது என்பது பற்றி எண்ணி மகிழ்ந்தான்.

தன் தங்கையின் தாலியின் விலையாககிடைத்த ஆஸ்தி அனைத்திற்கும் ஆண் வார்சு ஆறுமுகம்தானே!

கூண்டு பறவை விடுவிக்கப்பட்டதும் திக்கு தெரியாது பறப்பதுபோல் ஆறுமுகத்திற்கு தன் தாய் மாமன் கந்தப்ப செட்டியாரின் சொத்து சுதந்தரத்தை அனுபவிக்கும் வாய்ப்பு கிட்டியதும் கண்ணு மண்ணு தெரியாது கன்னியர்கள் வேட்டையில் காலங்கழித்து வந்தான்!

அதற்கு ஆதரவு தந்த அனேக அன்பர்களில் ஆறுமுகத்திற்கு உயிர் நண்பன் கண்ணன்.

உண்மைதான். ஒரே இலையில் இருவரும் உணவு உண்பது — ஒரே படுக்கையில் இருவரும் படுப்பது. ஏன்! ஆறுமுகம் உயிர் என்றால் கண்ணன் உடல், கண்ணன் உயிர் என்றால் ஆறுமுகம் உடல்!

அண்ணன் ஆறுமுகத்தோடு இணைபிரியாதிருக்கும் திகட்டாபேச்சும், உடற்கட்டும், முகவெட்டுமுடைய இளைஞன் கண்ணனை கண்டபோதெல்லாம், இன்பம் இன்னதென்றறியாத இளம் பூங்கொடியாள் சிங்காரிக்கு உடலில் உணர்ச்சி நீர்பெருகும்! பசியோடு இருக்கும் ஒருவருக்கு அறுசுவை உண்டியின் நறுமணம் அறிந்ததும் நாக்கில் ஊறும் தண்ணீர்போல!

நுகரப்படாத மலரான — மீட்டப்படாத யாழான — சுவைக்கப்படாத சுளையான சிங்காரியை காணும்போதெல்லாம் கண்ணனுக்கும் உடலில் உணர்ச்சி அலைகள் எழும்பி உள்ளத்தை கரைக்கும்! ஆழியில் அடிக்கும் அலைகள் கரையைமோதி கரைப்பதுபோல!

இந்நிலையில் இருவரும் தனிமையில் ஒரு நாள்!

ஒருவருமில்லையா — கண்ணன்!!

எவருமேயில்லையே — சிங்காரி!!!

இத்தகைய தருணத்தை எதிர்நோக்கி இருந்த கண்ணன் வெடுக்கென்று அணைத்தான்; சிங்காரியும் விடாதிர் என்றாள்!

பிறகு கேட்கவா வேண்டும்! தினசரி கண்ணன் தன் படுக்கையில் ஆறுமுகத்தை தூங்க வைத்துவிட்டு, காதலியைகாண துடிக்கும் உளத்தோடு தோட்டத்திற்கு செல்ல — சிங்காரியும் காதலன் வரவை கண்டிட கண் கொட்டாது கொல்லை கதவை திறந்துவைத்து காத்து நிற்க இருவரும் சந்தித்து — மேகத்தோடு மேகம் மோதி மின்னலாய் மின்னி இடியாய் சப்தித்து மழையாய் பொழிவதுபோல் — போகப்போரில் பின்னி மின்னல் வேகத்தில் இச்சென்ற இடியோசையை எழுப்பி காதல் மழையை பொழிந்திருந்தனர்!

ஒரு நாள் கண்ணன் ஓசைபடாது திரும்பி எழுந்து பதுங்கி செல்வதைப் பார்த்த ஆறுமுகம் சந்தேகங் கொண்டவனாய் பின்தொடர்ந்து சென்றான்! கண்ணன் சென்று தன் வருகையின் வழிமீது விழிவைத்து நிற்கும் சிங்காரியை கட்டி தழுவினான்!

ஆறுமுகம் மறைந்திருந்து பார்ப்பதற்கு சாட்சியம் கூறுவதுபோல்; நீலவானில் கலந்து செல்லும் மேகக் கூட்டத்தில் மறைந்து மறைந்து தோன்றியது கோல நிலவும்!

தங்கள் இலட்சியத்தில் ஈடுபட்டிருக்கும் இளங் காதலர்களுக்கு இதன்பொருளை கவனிப்பதற்கு காலம் ஏது!

திடீரென ஒரு பெருங்காற்று! மேகம் சூழ்ந்தது, வானமும் இருண்டது. அதேநேரம் காதல்வெள்ளத்தில் நீந்தி கரைகாணாதிருந்த கண்ணன்—சிங்காரி முன் ஆறுமுகம்!

[தொடர்ச்சி 2 பக்கம் பார்க்க.]

ஆசிரியருக்கு கடிதங்கள்.

அ. க. சே. இரசூல்.
டைலர், செயங்கொண்டம். 2—9—50

சென்னை-600 008

இன்று தமிழ் நாட்டில் புது இந்திய அரசியல் சட்டப்படி "கம்யூனல் ஜி. ஓ, வகுப்புவாதத்தை வளர்க்கக்கூடியது" என்று, சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு கூறிவிட்டது.

உண்மை, ஏற்றுக்கொள்ளுகின்றோம். ஆனால் அதே நேரத்தில் மாணவர்களின் (திராவிடர்) நிலையை கவனிக்க வேண்டுகின்றோம்.

ஒரு மாணவன் S. S. L. C. தேர்தலில் அரசியலார் திட்டப்படி 210 மார்க்குகள் பெற்றிருந்தால், மேல் படிப்புக்கு தகுதி உள்ளவன் என்று ஆகிறது அப்படி இருக்க, கல்லூரியில் சேர்க்கும்போது "300 மார்க்குகளுக்குமேல் பெற்றிருந்தால்தான் இடம்" என்று சொன்னால் எப்படி நியாயமாகும்? இப்படி சொல்லக் காரணம் என்ன? கல்லூரியில்—இடமின்மைதானே? உதாரணமாக 500 மாணவர்கள் படிக்க, இடவசதி உள்ள ஒரு கல்லூரியில் 800 மாணவர்கள் மனுசெய்தால் எப்படி எல்லோர்க்கும் இடம் கிடைக்கும்? அதனாலேயே தகுதி பார்த்து மாணவர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். (அதாவது அதிக மார்க்கு வாங்கியவர்களை) அப்படி எடுக்கும்போது பார்ப்பன மாணவர்களுக்கு 100க்கு 75 சதவீதம் இடம் கிடைத்துவிடுகின்றது. ஆகவேதான் வகுப்பின் எண்ணிக்கைபடி மாணவர்களை சேர்க்கும்படி கேட்கிறோம்.

இது எப்படி வகுப்புவாதத்தை வளர்க்கக்கூடியதாகும்? இது வகுப்புவாதத்தை வளர்க்கக்கூடியதென்றால், சமீபத்தில் திருப்பதியில் பார்ப்பன மாணவர்கள் "சமபந்தி போஜனம் செய்யமுடியாது" என்று சொன்னது வகுப்புவாதத்தை தூண்டக் கூடியதல்லவா? இதைமட்டும் சென்னை அரசாங்கம் எப்படி ஏற்றுக்கொண்டது?

வகுப்புவாரி பிரதிநிதித்வம் தள்ளுபடியானதும் வாய்பொத்தி, மௌனமாய் இருப்பதின் காரணம் என்ன? தமிழ்நாட்டில் பள்ளிகள், கல்லூரிகள் அதிகப்படுத்தி அரசாங்க திட்டப்படி மார்க்குகள் வாங்கி தேறிய மாணவர்கள் அனைவர்க்கும் இடமளியுங்கள்! ஏன், உத்தியோகத்துறையிலேயும் இவ்விதமே செய்யுங்கள். உத்தியோகத் துறையில் மட்டுமல்ல! எல்லாத் துறைகளிலேயும் இவ்விதம் செய்யவேண்டும். "இதற்கு பணம் இல்லை" என்றால் பெரிய, பெரிய கோவில்களில் குவிந்து கிடக்கும் பணத்தை பயன்படுத்துங்கள். இல்லையேல், வகுப்புவாரி பிரதிநிதித்வத்தை அமுல் நடத்துங்கள்! சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றால், சட்டத்தை திருத்துங்கள், அதுவும் செய்ய முடியாவிட்டால், திராவிடநாடு திராவிடர்க்கு ஆக முயற்சியுங்கள், அதுவும் முடியாவிட்டால்; பெரியார் சொன்னது போல் "நல்லது செய்ய முடியாவிட்டாலும் கெடுதியாவது செய்யாதிருங்கள்" நல்லது செய்கிறவர்களை கெடுக்காதீர்கள் என்று எச்சரிக்கின்றோம்.

வகுப்புவாரி (கம்யூனல் ஜீ. ஓ.) இல்லையேல் திராவிடர்களுக்கு வாழ்வில்லை திராவிடர்கள் அனைவரும் ஒன்றுபடுங்கள்! கிளர்ச்சி செய்யுங்கள்! வெற்றி நமதே!!

வாழ்க பெரியார்,

கட்டுரையாளருக்கு!

—:—

நாங்கள் எழுதிஅனுப்பும் கட்டுரை, கவிதை, கதைகளில் அமைக்கும் புனைப்பெயரோடு முழு முகவரியும்எழுத கோருகிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகள் திருப்பிப் பெற விரும்புவோர் போதிய தபால்பில்லைகள் அனுப்பவேண்டும்.

ஆசிரியர்

— பாட்டாளிகளின் பாரம்தீர்க்கும்....!
— ஏழைகளின் இன்னல்தீர்க்கும்....!
— நம்மவருக்கு நலம்தேடும்....!
— கிழமை இதழ் எது?...?

நீங்கள் விரும்பும் பொய்யாமொழியே

உங்களின் கடமையை செய்துவிட்டீர்களா
இல்லையேல் நாளையே
சந்தாதாரராய் சேருங்கள்.

சோப்புகளில் சிறந்தது

"ஆனந்தா சோப்"

★ ஆடைகளை வெளுப்பதில் நிகரற்றது ★

தயாரிப்பவர்:-

ஆனந்தா சோப் ஒர்க்ஸ்,

சாக்கோட்டை P. O. : : கும்பகோணம்:

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Puhd by M. Bheblisaskaranar, 17, Ketchari Street, Jayankondacholapuram.